# தேசத்தின் தோள்கள்!

ப. பார்த்திபன்



# சென்னை முகவரி

## படிப்போர் சேர வேண்டிய இடம்

**முகவரியின் முகம் :**

"என்னோடு படித்தவர்கள் பெரும் பொறுப்பில் இருக்கிறார்கள்"

ஒரு கிராமத்தில் இருந்து வந்த B.Sc Maths Gold medel ரமேஷ் ஒரு பெரும் நகரத்தில் முகம் காட்டாமல் பணிசெய்து வந்தார். இந்த சர்க்காருக்கு பின் கண்ணாடி வழியாக நம்மை பார்க்கிறார். கொஞ்சம் கோவம் கொஞ்சம் ஆதங்கம் நிறைய அன்பு வரிகள் விழுந்த இவர் முகத்தினை நேரில் கண்டபோது சேகரித்த தகவல்கள் உங்களுக்கும்.

**எதை நோக்கி:**

2002ல் பதிவு செய்த இதன் நோக்கம் மாணவர்களின் உயர்கல்விக்கு கல்வி உதவித்தொகை வழங்குவது மூலம் மனித நேயத்தையும் நேர்மையையும் விதைப்பது. 351 பேர் கற்கிறார்கள். இந்த நிறுவனத்தின் கல்விக்கான உதவி மூலம் 70 பேர் மருத்துவம், நிறைய பொறியியல், 2 பேர் civil service மற்றும் மற்றைய உயர்கல்வியில் மாணவர்கள் சேலம், விழுப்புரம், தர்மபுரி, திருப்பூர், ஈரோடு சேர்ந்தவர்கள். 102 பேர் நல்ல பணி நிலையில் இருக்கிறார்கள்.

**இந்த நகர்வின் பின்னனி:**
ரமேஷ் அவர் தனது தந்தையை நினைவு கூறுகிறார்.

"தண்ணீரோடு நேர்மையும் ஊற்றெடுத்தது"

"அப்பா பால்மாடு நிறைய வைத்திருந்தார். ஆனால் பாலில் துளிதண்ணீர் கலக்கமாட்டார். இதுபோல அப்பாவிற்கு பூமிக்கடியில் தண்ணீர் ஊற்றெடுக்கும் இடம் கண்டறியும் திறன் உண்டு. ஒருவரிடத்தில் இதை கண்டுணர்ந்து கொடுத்ததற்காக 5 பவுன் நகை கொடுக்க முன் வந்தார்கள். ஆனால் என் தந்தை சொன்னார். எனக்கு இது வேண்டாம் முடியாதவர்களுக்கு ஒரு வேளை உணவு கொடுங்கள் என்று. அந்த நேர்மையே என்னை நகர்த்துகிறது. அதன் பின் ஒவ்வொரு மனிதரிடமும் ஒரு செயலும் சிந்தனையும் என் அனுபவமாகிறது.



**வலிமையடைந்த நேரங்கள் :**
பொருளாதாரமின்றி தவித்தபோது
உதவிவேண்டி நின்று விழிபிதுங்கிய நேரத்தில்....
உதவியவர்களில் சிலர் என்னை சந்தேகமாக பார்த்தபோது..
மாணவர்கள் முன்னேறிய போது...

**தனி நிறைவு :**

தோல்விகளையே சந்தித்து வந்த எனக்கு தனிப்பட்ட முறையில் சத்குருவைச் சந்தித்து ஆசிர்வாதம் பெற்ற தருணமே இன்று வரை மன நிறைவு.

போராடிக் கொண்டிருக்கிறேன்... நிதிக்காக...

பீஸ் கட்டலைனா தூக்கம் வராது. இன்று இரண்டு இலட்சம் வந்தால் நாளை இல்லை.



"ஒவ்வொரு கொடையாளியும் ஒவ்வொரு மாதிரி"

படித்தவர்களை திரும்பி பார்க்க வைப்பதற்காக..

நேர்மையாக இருக்க.. தினமும்..

என் பணியினை புரிய வைப்பதற்காக...

நன்றியுணர்வை மாணவர்களிடத்தில் விதைக்க...

கொடுத்த வாக்குறுதிகள் காப்பாற்றுவதற்காக...

பணியினை கட்டமைக்க...
அடுத்த தலைமைக்கு பரிமாற...




நாளை:
2025ல் பெரும் பள்ளி துவங்கனும் முருகதாஸ் அண்ணா, மேயர் சைதை துரைசாமி அப்பா இவர்கள் இதற்கு இன்று போல் என்றும் துணை நிற்பார்கள்...
படித்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் சிறு சிறு உதவி செய்வதோடு அவர்களே இப்பள்ளியையும் நடத்துவார்கள்...
அந்த பள்ளி மாணவர்களின் இயல்புக்கானது... தனக்கு தேவையானதை தானே தேடும் பள்ளி பொருட்கள் உட்பட.... நாள் முடிவில்...
அன்பும் நன்றியணர்வும் மிஞ்சனும்...
கல்விதாண்டி அழகான உறவு வேணும்...

அண்ணா, அக்கா, தம்பி, தங்கை, என்று...
செயலில் உண்மை....
படிக்கறவங்கள கூட்டி வாங்க...
எங்க உடன் நிற்கனுமோ அங்க நில்லுங்க...

"ரமேஷோடு முகவரி முடிவதில்லை"

என் பொறுப்பு அடுத்த நிலைக்கு எப்படி வேணுமானாலும் மாறலாம்.. ஆனால் இது இதேபோல் நல்லவர்களோடு தொடரட்டும்...



முகவரி பவுண்டேசன் :
ரமேஷ்,
14/1 முதல் தெரு, காரம்பாக்கம், போரூர்,
சென்னை-116. பேசுங்கள் – 98400 30942, 044-24762710.